TAMILTH Chennai 1 Edit_01 Kanagaraj K 210356 HT89910



இந்து தமிழ் திசை
உண்மை நின்றிட வேண்டும்
புதன், ஆகஸ்ட் 7, 2024

# உழுதுண்டு வாழ்வாருக்காக உழைத்தவர்!

வேளாண்மையை மையமாகக் கொண்ட நம் நாட்டின் வேளாண் துறையை நவீன அறிவியல் முறை சார்ந்த வழிமுறைகளுக்கு இட்டுச் சென்றதற்காக அறியப்படுபவர் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன். 'பசுமைப் புரட்சியின் தந்தை' என அறியப்படும் அவருடைய நூற்றாண்டு இன்று தொடங்குகிறது.

பாரம்பரியமாக வேளாண்மையை நிர்வகித்துவந்த ஒரு குடும்பத்தில் சுவாமிநாதன் பிறந்திருந்தாலும், அவருடைய தந்தை கும்பகோணத்தில் ஓர் அறுவைசிகிச்சை நிபுணராகச் செயல்பட்டுவந்தார். கல்லூரியில் படித்த காலத்தில் வேளாண்மை உள்பட இரண்டு பட்டங்களை சுவாமிநாதன் பெற்றிருந்தார். நாடு விடுதலை பெறுவதற்கு முந்தைய காலத்தில் காவல் துறையில் சேரவே அவர் விரும்பினார். விடுதலைப் போராட்டமும் காந்தியத்தின் செல்வாக்கும் வேளாண் துறையை நோக்கி அவரை நகர்த்தின.

இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் (IARI) இயக்குநராக அவர் இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவால் அரிசி, கோதுமை போன்ற உணவு தானியங்களில் அதிக மகசூல் தரும் விதைகள் உருவாக்கப்பட்டன. வேளாண் ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்ற அமெரிக்க விஞ்ஞானி நார்மன் போர்லாகுடன் இணைந்தும் சுவாமிநாதன் செயல்பட்டார். இந்தியாவைப் போன்ற ஒரு வளரும் நாடு 1960களில் பஞ்சம், பட்டினி போன்ற நெருக்கடிகளுக்குத் தள்ளப்பட்டபோது, அதற்குத் தீர்வுகாண வேண்டிய தேவை அரசுக்குத் தீவிரமாக எழுந்தது. இந்தப் பின்னணியில், அன்றைய வேளாண் அமைச்சர்கள் சி.சுப்பிரமணியம், ஜகஜீவன் ராம் ஆகியோரின் கீழ் செயல்பட்ட நெல் ஆராய்ச்சி நிறுவனமும் இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றமும் (ICAR) புதிய விதை வகைகளை உருவாக்கின.


இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றத்தின் தலைமை இயக்குநராக 1972இல் பொறுப்பேற்ற சுவாமிநாதன், அதே ஆண்டில் ராமன் மகசேசே விருதையும் பெற்றார். பிறகு, பிலிப்பைன்ஸில் உள்ள பன்னாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அந்தப் பணியில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு தமிழ்நாடு திரும்பினார்.

உலக உணவுப் பரிசை (1987) முதன்முதலாகப் பெற்றபோது கிடைத்த பரிசுப் பணத்தை ஆராய்ச்சிப் பணிகளுக்காக அர்ப்பணித்தார். 'எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை' என்கிற பெயரில் சென்னை தரமணியில் இயங்கிவரும் அந்த நிறுவனம் உழவர்கள், கிராம மேம்பாடு குறித்த ஆராய்ச்சிகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகிறது.

விவசாய விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை என்பது விளைச்சலுக்கு உழவர்கள் செய்த செலவைவிட 50 சதவீதம் அதிகமாக இருக்க வேண்டும் என அவர் தலைமையிலான குழு மத்திய அரசுக்கு அளித்த பரிந்துரை விவசாயிகளால் இப்போதும் வலியுறுத்தப்பட்டுவருகிறது. நாட்டின் உயரிய அரசு விருதுகள் அனைத்தாலும் பெருமைப்படுத்தப்பட்ட அவர், பாரத ரத்னா என்கிற உச்ச விருதாலும் அலங்கரிக்கப்பட்டார். மாநிலங்களவை உறுப்பினராகவும் செயல்பட்டுள்ளார்.

பசுமைப் புரட்சியின் காரணமாக இன்றைய வேளாண்மை அளவுக்கு அதிகமான தண்ணீர், வேதி உரங்கள், பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றை அதிகமாகச் சார்ந்திருப்பது இன்றைக்கு விமர்சனங்களைச் சந்தித்துவருகிறது. அன்றைக்குப் பஞ்சமும் பட்டினியும் வாட்டி வதைத்ததற்குத் தீர்வுகண்டதைப் போல, இதற்கும் தீர்வுகாண வேண்டிய அவசியத்தில் இப்போது இருக்கிறோம்.

அதேநேரம், பசுமைப் புரட்சி என்பது ஏதோ திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட கேடு என்கிற கருதுகோளுடன் அணுகக் கூடாது. அன்றைய உலகப் போக்கில் அது தேவையாக இருந்தது. அதன் காரணமாகவே உணவு உற்பத்தியில் தன்னிறைவு, அந்நிய நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டிய தேவையில்லாமல் போனது என்பதை உணர வேண்டும். சுவாமிநாதனே பிற்காலத்தில் குறிப்பிட்டதுபோல் 'பசுமைமாறா புரட்சி'யை நோக்கி நகர்வதே தற்போதைய தேவை.



**பாலசுப்ரமணியம் முத்துசாமி**
'இன்றைய காந்திகள்' உள்ளிட்ட நூல்களின் ஆசிரியர்
தொடர்புக்கு: arunbala9866@gmail.com




# இந்தியாவின் பட்டினிக்கு முற்றுப்புள்ளி வைத்தவர்

ஆங்கிலேயர் வணிகம் செய்ய இந்தியாவில் காலடி வைத்தபோது, உலகின் மிகப் பெரிய பொருளாதாரமாக நம் நாடு இருந்தது. உலகப் பொருளாதார அளவில் 24% இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டது. 200 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் வெளியேறியபோது, இந்தியப் பொருளாதார உற்பத்தி உலகப் பொருளாதாரத்தில் 4% ஆகச் சுருங்கிப் போனது. அந்த அளவுக்கு மிகப் பெரிய கொள்ளை ஆங்கிலேயர் ஆட்சியில் நடந்தது. பசியும் பஞ்சமும் சகஜமான நிகழ்வுகளாக மாறிப்போயின.

விடுதலைக்குப் பின்னர், உணவு உற்பத்தியை அதிகரிக்க இந்திய அரசு பல்வேறு திட்டங்களைத் தொடங்கியது. நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் கட்டும் முயற்சிகள் முதலியன தொடங்கின. ஆனாலும் அவற்றால் உணவு தானியப் பற்றாக்குறையை விரைவில் தீர்க்க முடியவில்லை. உணவு தானியங்களை இறக்குமதி செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகத் தொடர்ந்தது.

### எம்.எஸ்.சுவாமிநாதனின் முன்னெடுப்பு

நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கும் திட்டங்களுடன், அதிக மகசூல் தரும் உயர்தர ரக விதைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து இந்தியாவில் பயிரிடலாம் என்னும் ஒரு யோசனை முன்வைக்கப்பட்டது. மெக்சிகோவில் வெற்றிகரமாக வீரிய ஒட்டு கோதுமை ரகங்களை உருவாக்கிய நார்மன் போர்லாகை எம்.எஸ்.சுவாமிநாதன் தொடர்பு கொண்டார். அவர் மூலம் வீரிய கோதுமை ரகங்களை இறக்குமதி செய்து, சரியான ரகங்களை அடையாளம் கண்டு, இந்தியச் சூழலுக்கேற்ப மாற்றியமைத்து வெளியிட்டார்.

வீரிய கோதுமை ரகங்களை அடையாளம் கண்டு, தென் அமெரிக்கா – ஆசிய நாடுகளில் உணவு உற்பத்தியைப் பெருமளவு உயர்த்தியதற்காக, நார்மன் போர்லாக் 1970 ஆண்டு நோபல் பரிசு பெற்றார். அவர், டாக்டர் சுவாமிநாதனுக்கு எழுதிய கடிதத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்:

'பசுமைப் புரட்சியின் வெற்றி, இந்திய விஞ்ஞானிகள், அலுவலர்கள், நிறுவனங்கள், உழவர்கள் என ஒரு குழுவின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றி. அதற்கான பாராட்டுக்கள் அனைவருக்கும் சேரும் என்றாலும், மெக்சிகக் குட்டை இனக் கோதுமை விதைகளின் விளைச்சல் சாத்தியங்களை அடையாளம் கண்டு முன்னிறுத்திய உங்களின் பங்களிப்பு முதன்மையானது. அதுதான் பசுமைப் புரட்சித் திட்டத்தைப் பெரிய வெற்றியடையச் செய்தது.'

### இரட்டைப் பொறுப்பு

கோதுமையைத் தொடர்ந்து நெல்லிலும் ஐ.ஆர்–8 போன்ற உயர் விளைச்சல் ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு பெரு வெற்றியடைந்தன. டாக்டர் சுவாமிநாதன், 1972ஆம் ஆண்டு இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றத்தின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டார். அரசின் முடிவுகளுக்கும், விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளுக்கும் இடையில் உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்து, மிக வேகமாக உணவு தானிய உற்பத்தி தொடர்பான கொள்கை முடிவுகளை முன்னெடுத்துச் செல்லவேண்டிய காலக் கட்டமாக இருந்ததால், இந்திய அரசின் வேளாண்மைச் செயலராகவும் ஒரே சமயத்தில் அவர் நியமிக்கப்பட்டார். இதன் விளைவாக, அரசின் கொள்கை முடிவுகள் தாமதமின்றிச் செயல்படுத்தப்படும் சூழல் உருவாக்கப்பட்டது.

### பரிசும் பங்களிப்பும்

1980ஆம் ஆண்டு, திட்டக் குழுவில் பணியாற்ற அனுப்பப்பட்ட சுவாமிநாதன், வேளாண்மையில் பெண்களின் பங்களிப்பு, சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் போன்றவற்றை ஆய்வுகள் வழியே அறிந்துகொண்டார். 1982இல், மணிலாவில் உள்ள பன்னாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட முதல் ஆசியர் சுவாமிநாதன் தான். இங்கே அவர் நெல் உற்பத்திச் சூழலில் மகளிரின் பங்கு என்ன என்பது தொடர்பான முதல் உலக மாநாட்டை நடத்தினார். இந்த நெல் ஆராய்ச்சி நிலையத்தில் அவர் முன்னெடுத்த திட்டங்கள் உலக ஆய்வுத் தளங்களில் போற்றப்பட்டு, 1987ஆம் ஆண்டு முதலாவது 'உலக உணவுப் பரிசு' அவருக்கு வழங்கப் பட்டது.




இந்தப் பரிசு வழியே கிடைத்த பணத்தைத் தன் சொந்தப் பயன்பாட்டுக்கு வைத்துக்கொள்ளாமல், 'எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை' என ஊரக மக்கள் மேம்பாட்டுக்கான ஒரு நிறுவனத்தைச் சென்னையில் தொடங்கினார். தமிழ்நாடு அரசு, அவரது ஆராய்ச்சி நிறுவனத்தை அமைக்க, தரமணியில் ஓர் இடத்தை ஒதுக்கிக் கொடுத்தது. இந்த நிறுவனம் நீடித்து நிலைக்கும் வேளாண்மை வழிகள், பெண்கள், ஊரக மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்து நடத்திவருகிறது.

### விமர்சனங்களைத் தாண்டி...

இந்தக் காலக்கட்டத்தில்தான் பசுமைப் புரட்சித் திட்டத்தின் பக்கவிளைவுகள் பேசப்படத் தொடங்கின. அதீத வேதிப் பொருள்களின் பயன்பாடு, நிலத்தடி நீர் குறைதல், மண்வளம் குறைதல் போன்ற பிரச்சினைகள் எழத் தொடங்கின. இதை ஆராய்ந்த டாக்டர் சுவாமிநாதன், வேளாண் உற்பத்தி என்பது நீடித்து நிலைக்கும் ஒன்றாக மாற வேண்டும் எனக் குரல் கொடுத்தார். எந்த ஒரு திட்டத்துக்கும் எல்லைகளும் ஆயுளும் உண்டு. காலத்துக்கேற்பத் திட்டங்கள் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும் என்னும் அறிவார்ந்த தளத்தில் நின்று தன் நிலைப்பாட்டை முன்வைத்தார்.

2004ஆம் ஆண்டு இந்திய அரசு, தேசிய உழவர் நலக் குழுவின் தலைவராக சுவாமிநாதனை நியமித்தது. இந்தக் குழு, அக்காலத்தில் பெரும் சமூக அவலமாக உருவெடுத்த, உழவர் தற்கொலைகளின் பின்னணியில் உருவாக்கப்பட்டதாகும். விடுதலை பெற்ற காலத்திலிருந்து, உணவு தானியம் உள்ளிட்ட வேளாண் பொருள்களின் உற்பத்தி பல மடங்கு பெருகியிருந்தாலும், வேளாண்மை என்பது உழவர்களுக்கு லாபம் இல்லாத ஒன்றாக மாறிப் போனது. இதன் விளைவாக மகாராஷ்டிரம், ஆந்திரம் உள்ளிட்ட பல மாநிலங்களில், கடன் தொல்லை தாள இயலாமல் உழவர்கள் பெருமளவில் தற்கொலை செய்துகொள்ளத் தொடங்கினார்கள். இந்த அவலத்துக்கான தீர்வுகளை உருவாக்குமாறு சுவாமிநாதனை அரசு பணித்தது. டிசம்பர் 2004 முதல் அக்டோபர் 2006 வரையிலான காலக்கட்டத்தில், இந்தக் குழு மொத்தம் ஐந்து அறிக்கைகளை அரசுக்கு அளித்தது. அதில் முதன்மையானது, உழவர்களின் உற்பத்திக்கு நியாயமான விலையை உறுதிசெய்வது.

உழவர்களின் உற்பத்திச் செலவுகளுடன் அவர்கள் உழைப்புக்கான கூலியையும் சேர்த்து அதன் மீது 50% லாபத்தைக் கொடுப்பதே உழவர்களுக்கு லாபகரமாக இருக்கும் என்னும் அறிவியல்பூர்வமான ஓர் அடிப்படையை உருவாக்கி, அரசுக்குச் சமர்ப்பித்தார் சுவாமிநாதன். கட்சி வேறுபாடுகள் தாண்டி, இந்த அடிப்படை நியாயமான ஒன்று என இந்தியச் சமூகம் ஒத்துக்கொண்டிருப்பது அவரது முக்கியமான பங்களிப்பாகும்.

### நன்றிக்குரியவர்

காவிரி டெல்டாவில், மிகப் பெரும் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தவர் சுவாமிநாதன். இளைஞராக இருந்த காலத்தில், வங்கப் பஞ்சத்தில் கோடிக்கணக்கான மக்கள் பசியால் இறந்த கொடுமை அவரைப் பெரிதும் பாதித்தது. எனவே, வேளாண்மை படிக்க முடிவெடுத்தார். இந்தியச் சமூகத்துக்கு உணவுப் பாதுகாப்பை உருவாக்கும் பெரும் பணியில் தன்னை ஆட்படுத்திக்கொண்டார். வாழ்க்கையின் முதல் பகுதியில் அறிவியலின் துணை கொண்டு உழைத்தார். இரண்டாம் பகுதியில், பொதுநலத் திட்டங்களின் வழியே உழவர்கள் மேம்பாட்டுக்கான கோட்பாடுகளை உருவாக்கினார். வாழ்வின் இறுதி விநாடி வரை, உழவர்களுக்கும் ஊரக மக்களின் நலனுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு லட்சிய வாழ்க்கை அவருடையது. இந்த பாரத ரத்தினத்துக்கு இந்தியச் சமூகம் என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருக்கும்.



**சௌம்யா சுவாமிநாதன்**
தலைவர்,
எஸ்.எஸ்.சுவாமிநாதன்
ஆராய்ச்சி அறக்கட்டளை



valliappan.k@hindutamil.co.in

# ஒரு மகளின் நினைவலைகள்

நான் சிறுமியாக இருந்தபோது இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ஐ.ஏ.ஆர்.ஐ) மாணவர்களால் எங்கள் வீடு நிரம்பியிருந்தது, என்னுடைய பசுமையான நினைவுகளாக நிலைத்துவிட்டது. என்னுடைய தந்தை அதிகாலையிலேயே தனது மிதிவண்டியில் கிளம்பிவிடுவார். மரபியல் துறையில் தன்னுடைய காலை வகுப்புக்காகச் செல்லும் வழியில் பரிசோதனைக் களங்களுக்குச் சென்று பார்வையிடுவார். மாலையில் அவர் வீடு திரும்புகையில் பெரும்பாலும் அங்கு சில மாணவர்களேனும் தம்முடைய முனைவர் பட்டத்துக்கான ஆய்வுப் பணி குறித்து அவருடன் கலந்தாலோசிப்பதற்காகக் காத்திருப்பார்கள். ஐ.ஏ.ஆர்.ஐ–இல் பல வெளிநாட்டு மாணவர்களும் இருந்தனர். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் எங்கள் வீட்டுக்கு வரலாம். இதனால்தான் ஐ.ஏ.ஆர்.ஐ. நிறுவனத்தை எங்களது விரிவுபடுத்தப்பட்ட குடும்பமாகவே கருதுகிறோம்.

எனது தந்தை பஞ்சாபிலும் ஹரியாணாவிலும் இருந்த விவசாயிகள் அறிவியலாளர்களுடன் பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட தொழில்நுட்பங்களைப் பரிசோதித்துக்கொண்டும், அவற்றில் மாற்றங்களைச் செய்துகொண்டும், செயல்படுத்திக்கொண்டும் இருந்தபோது, எனது அன்னை குழந்தைகளின் கல்வி – பராமரிப்புக்கான புதுமையான, செலவு குறைவான வழிமுறைகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். அவர் ஐ.ஏ.ஆர்.ஐ–இல் நேரு பரிசோதனை மையத்தை (Nehru Experimental Centre) உருவாக்கினார். அது ஐ.ஏ.ஆர்.ஐ. ஊழியர்களின் குழந்தைகளுக்கான பராமரிப்பு இல்லமாகவும் முன்பள்ளியாகவும் செயல்பட்டது.

### உணவும் ஊட்டச்சத்தும்

எனது தந்தை வேளாண்மைக்கும் அதைவிட முக்கியமாக விவசாயிகள் நலனுக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டிருந்தார். சிறு–குறு விவசாயிகள், சிறு மீனவர்கள், பழங்குடிகள் ஆகியோரின் நலனிலும் அவர் அக்கறைகொண்டிருந்தார். மனித நல்வாழ்வு குறித்து அவருக்கு முழுமையான பார்வை இருந்தது. அது உணவு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பின் வெவ்வேறு கூறுகளில் கவனம் செலுத்துவதாக இருந்தது. உணவும் ஊட்டச்சத்தும் போதுமான அளவு இருப்பது மட்டும் அல்ல. அது அனைவருக்கும் சாத்தியமாகக்கூடிய விலையில் கிடைப்பதும் முக்கியம் என்று அவர் நினைத்தார். அதோடு, ஊட்டச்சத்து உட்கொள்ளப்படுவதிலும் கவனம் செலுத்தினார் (இதற்குக் குடல் ஆரோக்கியமாக இருப்பது முக்கியமானது. சுத்தமான குடிநீர், பாதுகாப்பான துப்புரவு வசதிகள் கிடைப்பது குடல் ஆரோக்கியத்துக்கு அவசியம்).

நமக்காக உணவு உற்பத்தி செய்வோர் ஆரோக்கியமான வளம்மிக்க வாழ்க்கையை வாழ முடிவதில்லை என்கிற கவலை அவருக்கு எப்போதும் இருந்துவந்தது. மறை பசி (hidden hunger) குறித்து முதலில் பேசியவர்களில் அவரும் ஒருவர். அதாவது, பேரூட்டச்சத்துக் குறைபாட்டைப் போலவே (macronutrient deficiency) நுண் ஊட்டச்சத்துக் குறைபாடும் (micronutrient deficiency) முக்கியமான பிரச்சினை என்றபோதிலும், பின்னது போதுமான கவனத்தைப் பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். இந்தியாவில், குறிப்பாகப் பெண்கள், பதின்பருவப் பெண்களிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகமாகக் காணப்படுகிறது. மக்களில் பலர் போதுமான நுண் ஊட்டச்சத்துக் கூறுகளைத் தரக்கூடிய சமநிலையான ஊட்டச்சத்துமிக்க உணவைப் பெறுவதில்லை என்பதையே இது உணர்த்துகிறது. மண் வளம் சரிவதும் (இது பயிர்களின் ஊட்டச்சத்து உள்ளடக்கத்தைப் பாதிக்கிறது) பிற சுற்றுச்சூழல் காரணிகளும் இதில் முக்கியப் பங்குவகிக்கின்றன. இது நாம் தீர்க்க வேண்டிய பிரச்சினையாக இன்றும் நீடிக்கிறது.

### முழுமைவாய்ந்த தீர்வுகள்

ஒரு பிரச்சினையைச் சரியாக உள்வாங்கி அதன் வெவ்வேறு கூறுகளையும், தீர்மானிக்கும் அம்சங்களையும், அவை ஒன்றோடொன்று வினைபுரியும் விதங்களையும் ஆய்வுசெய்து, பிரச்சினைகளுக்கான முழுமைவாய்ந்த தீர்வுகளை வடிவமைக்கும் ஆற்றல் என் தந்தைக்கு இருந்தது. ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து அதில் நிபுணத்துவம் பெறும் பெரும்பாலான அறிவியலாளர்களைப் போல் அல்லாமல் என் தந்தையால் அரசியல், சமூக, சுற்றுச்சூழல் அம்சங்களை உள்ளடக்கிய நுண்ணிய, விரிவான தளங்களில் இயங்க முடிந்தது. இந்தச் சிறப்புக் குணாம்சத்தின் பயனாக, நம் நாடு தன்னிறைவு அடைவதற்கு எத்தகைய கொள்கைகளும் சட்டங்களும் தேவை என்பதையும் அவற்றைச் செயல்படுத்துவதற்கான வழிகளையும் யோசித்துப் பரிந்துரைக்க அவரால் முடிந்தது. விவசாயிகளுக்கு நவீன, நீடித்திருக்கும் வேளாண் வழிமுறைகளையும் ஆதாரங்களையும் கொண்டு சேர்க்கச் செயல்படும் 'கிருஷி விஞ்ஞான் கேந்திர'ங்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சிப் பணிகள் (Indian Agricultural Research Service) ஆகியவற்றின் சிற்பி அவர். இந்த இரண்டு அமைப்புகளும் வேளாண் ஆராய்ச்சிக்கு வலுவூட்டியதோடு, வேளாண் தொழில்நுட்பங்கள் நாடு முழுவதும் உள்ள விவசாயிகளைச் சென்றடைவதைச் சாத்தியமாக்கின.

சர்வதேச அளவில் உணவு – வேளாண்மை நிறுவனம் (FAO), ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டம் (UN Environmental Program) உள்ளிட்ட ஐ.நா. சார்ந்த அமைப்புகளிலும், உலக இயற்கை நிதியம் (WWF), பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் (IUCN), உலக உணவுப் பரிசு அறக்கட்டளை (World Food Prize foundation), பட்டினி ஒழிப்புத் திட்டம் (hunger project), ஃபோர்டு அறக்கட்டளை ஆகிய பிற அமைப்புகளிலும் அவர் முக்கியப் பங்காற்றியுள்ளார். உயிர்ப்பன்மை ஒப்பந்தம், தாவர வகைமைகளைப் பாதுகாப்பது, விவசாயிகள், கால்நடை வளர்ப்போரின் உரிமைகள் சார்ந்த உலகளாவிய பேச்சுவார்த்தைகளில் அவர் பங்கேற்றுள்ளார். உணவு அமைப்புகளில் காலநிலை மாற்றத்தின் கடுமையான விளைவுகளை முன்னுணர்ந்ததோடு, பல்வேறு நிலைகளில் மரபணு – விதை வங்கிகளை உருவாக்க வேண்டியது குறித்தும் பேசினார். அவருடைய யோசனைகளும் சிந்தனையும் இன்று நடைமுறையில் இருக்கும் உலகளாவிய வளர்ச்சி வியூகங்கள், ஒப்பந்தங்கள், இலக்குகளை வடிவமைக்க உதவியுள்ளன. விவசாயிகள் நலனை உறுதிசெய்யாவிட்டால் வேளாண்மை செழிக்காது, உணவு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பை அடைய முடியாது என்பதைத் தொடர்ந்து வலியுறுத்திவந்தார்.

### மாற்றத்தை ஏற்கும் மனநிலை

அறிவியல் மீதான ஈடுபாட்டின் காரணமாக என் தந்தை எப்போதும் சவால்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார். விவாதம், உரையாடல், புதிய யோசனைகளைத் திறந்த மனதுடன் பரிசீலிப்பது, தெளிவான சான்று கிடைத்துவிட்டால் முடிவை மாற்றிக்கொள்ளத் தயாராக இருப்பது ஆகியவையே முன்னேற்றத்துக்கான வழிகள் என்று அவர் நம்பினார். ஒரு விவகாரத்தின் அனைத்துப் பக்கங்களையும் பார்க்க வேண்டும், பிரச்சினையைக் குறுகிய கண்ணோட்டத்துடன் அணுகினால் கொள்கை மாற்றம் அல்லது திட்டரீதியான மாற்றத்தின் சில தாக்கங்களை உணரத் தவறிவிடுவோம் என்பது அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்ட பாடங்களில் முக்கியமானது. சென்னையில் அவர் தொடங்கிய எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையில் உரிய விவாதத்துக்குப் பிறகே கொள்கைகளை வகுக்கும் அணுகுமுறையைப் பின்பற்றினார். ஆராய்ச்சிகளில் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களின் பங்கேற்பை உறுதிசெய்தார்.

நோபல் பரிசு வென்ற சி.வி.ராமனுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாகவே எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையை சென்னையில் அவர் தொடங்கினார். 1987இல் 'உலக உணவுப் பரிசு' உள்பட என் தந்தை வென்ற பல தேசிய, சர்வதேசப் பரிசுகளிலிருந்தே இதற்கான நிதி கிடைத்தது.

### இளைஞர்கள் மீதான நம்பிக்கை

அவருடைய 'பசுமைமாறாப் புரட்சி' (evergreen revolution) என்னும் கருதுகோள் உலகின் முதன்மையான அறிவியலாளர்கள், அறிவிஜீவுகள், கொள்கை வகுப்பாளர்களின் பெரும் ஆதரவைப் பெற்றுள்ளது. சுவாமிநாதன் அறக்கட்டளையைத் தொடங்கியபோது, அனைத்துத் திட்டங்களும் ஏழைகள், பெண்கள் ஆகியோருக்கும் இயற்கைக்கும் ஆதரவானதாகவே இருக்க வேண்டும் என்று அவர் தீர்மானித்திருந்தார். 1960, 70களிலேயே காலநிலை மாற்றம் குறித்தும் வேளாண்மையிலும் உணவு அமைப்புகளிலும் அது விளைவிக்கக் கூடிய தாக்கங்கள் குறித்தும் பேசத் தொடங்கியிருந்தார்.

தன்னுடைய கடைசி ஆண்டுகளில் இளைய தலைமுறை மீது அவர் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இளைஞர்களைச் சந்திப்பதிலும் அவர்களுக்கு வழிகாட்டுவதிலும் ஊக்குவிப்பதிலும் மிகுந்த ஆர்வம் செலுத்தினார். இளைய தலைமுறையினரால்தான் நமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என அவருக்குத் தெரிந்திருந்தது. பிறருக்காக நேரம் ஒதுக்கவும் பிறருடன் தன்னுடைய சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளவும் எப்போதும் அவர் தயங்கியதில்லை. தனது நற்பண்புகளைப் பிறர் தவறாகப் பயன்படுத்திக்கொண்டபோதும், அது அவரைக் கோபப்படுத்தியதில்லை.

உலகத்தில் வன்முறையும் எதிர்மறைச் செய்திகளும் நிரம்பியிருந்தாலும், நன்னம்பிக்கை கொண்டவராகவும் மகிழ்ச்சியான மனிதராகவும் இறுதிவரை அவர் இருந்தார். அவருடைய அறிவியல் பணிகள், அவர் கட்டமைத்த நிறுவனங்கள் அனைத்தையும் தாண்டி, அவர் வாழ்ந்த விதம் நம் அனைவருக்கும் பல பாடங்களை உள்ளடக்கியது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து அவருக்குப் பல விருதுகளும் கௌரவங்களும் கிடைத்தன. ஆனால், அவருக்குத் தனது களத்தில் பணியாற்றுவதும் அதனால் சிறு–குறு விவசாயிகள், சிறு மீனவர்கள், பழங்குடிச் சமூகத்தினரின் வாழ்வில் நேர்மறை மாற்றங்களைக் காண்பதுமே உந்துசக்தியாகத் திகழ்ந்தன. இந்திய அரசின் உயரிய விருதான பாரத ரத்னா அறிவிக்கப்பட்டபோது, அவர் இருந்திருந்தால் அது அவருக்குப் பெரும் மகிழ்ச்சி அளித்திருக்கும். ஆனால், அதற்கு அடுத்த நாள் காலையையே வழக்கம்போல், தீர்க்கப்பட வேண்டிய உலகளாவிய பிரச்சினைகளைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டுதான் அவர் தொடங்கியிருப்பார்.

(National Academy of Agricultural Sciences வெளியிட்ட Prof M.S. Swaminathan - A Memoir நூலில் சௌம்யா சுவாமிநாதன் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்)

தமிழில் சுருக்கமாக: **ச.கோபாலகிருஷ்ணன்**

இணையத்திலும் இந்து தமிழுடன் இணைந்திருக்க... www.hindutamil.in
சமூக வலைதளங்களில் எங்களைத் தொடர... facebook.com/TamilTheHindu/ x.com/TamilTheHindu youtube.com/@hindutamilthisai htamil.org/httwhatsapp
நடுப்பக்கக் கட்டுரைகளை ஒலிவடிவில் கேட்க...

கட்டுரைகளை editpage@hindutamil.co.in; வாசகர்கள் விமர்சனங்களை feedback@hindutamil.co.in ஆகிய மின்னஞ்சல்களுக்கு அனுப்பிடுங்கள். பத்திரிகையில் வெளியாகும் கட்டுரையாளர்கள் / பேட்டியாளர்களின் கருத்துகள் அவர்களுடைய சொந்தக் கருத்துகளே. அவை எந்த வகையிலும் இப்பத்திரிகையின் கருத்துகள் ஆகா.
அஞ்சல் முகவரி: **ஆசிரியர் இலாகா, இந்து தமிழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை - 2.**

CH-X